ராணி காமிக்ஸ்
முகமூடி வீரர்
மாயாவி
தோன்றும்
காரில் வெடிகுண்டு
ரூ 2

சிறப்போடு உயர்ந்திடுவோம்!

திட்டச்சேரி பொற்குணன்

பணிவு அன்பாம் பண்புதனை–நாம்
பாங் குடனே ஏற்றிடுவோம்!
கனி மொழியால் மாந்தர்களை–தினம்
கவர்ந்து மனம் மகிழ்ந்திடுவோம்!

நட் பென்னும் நன்மலரை– நம்
நெஞ்ச மதில் நிறைத்திடுவோம்!
பெட்பு மிகு நெறிகண்டு–தினம்
பொன் மனமே பெற்றிடுவோம்!

ஆன்றோரின் அறிவுரையை–நாம்
ஆய்ந்து உளம் தெளிந்திடுவோம்!
சான்றோர்கள் வாழ்த்திடவே–தினம்
சிறப் போடு உயர்ந்திடுவோம்!

எண்ணம்!

இதயம் ஈன்றெடுக்கும்
எண்ணம் இனிதானால்
உதயம் உன்வாழ்வில்
என்றும் தான்மலரும்...!

செய்கை எதுவாயின்
சீராய் அமைந்திட்டால்
உய்யும் உன்வாழ்வு
உலகம் கண்டவுண்மை...!

வருகிற வார்த்தைகள்
பிறருக்குக் கரும்பானால்
வருந்தும் நிலையுனக்கு
வாழ்வில் வருவதில்லை...!

–பெ. மணிவண்ணன், கூடலூர்.

பூகம்ப நிவாரண நிதி!

மிராட்டிய மாநிலத்தில் ஏற் பட்ட பயங்கர நில அதிர்ச்சி யில் ஆயிரக்கணக்கான பேர் பலியாகிவிட்டார்கள். பாதிக்கப் பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள் போர்க்கால அடிப்ப டையில் நடந்து வருகின்றன. இதுவரை மராட்டிய மாநில முதல்வர் பூகம்ப நிவாரண நிதிக்கு ரூ. 97 கோடியே 36 இலட்சம் குவிந்திருக்கிறது.

நில அதிர்ச்சியால் பாதிக்கப் பட்ட 60 ஆயிரம் கிராமத்தின ருக்கு தற்காலிகமாக தங்கும் இடம் அமைத்து கொடுக்கப் பட்டு வருகிறது.

உளவு பார்த்த செயற்கை கோள்!

சீனா மற்ற நாடுகளை உளவு பார்ப்பதற்காகவே ஒரு செயற்கை கோளை விண்வெளி யில் ஏவி இருந்தது. அந்த செயற்கைக் கோள் தன் கட்டுப் பாட்டை இழந்து, பாதையை விட்டு விலகி பூமியில் விழும் அபாயம் ஏற்பட்டது. இது 4 டன் எடை உள்ளது. செயற்கை கோள் எங்கு விழுமோ என்ற பயம் இருந்து வந்தது. சமீபத் தில் அந்த செயற்கைக் கோள் பசிபிக் கடலில் விழுந்துவிட் டது. இது பெருவில் இருந்து மேற்கே 1600 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

இராட்சத போஸ்டர்!

ஆங்காங் இராட்சத போஸ் டர் ஒன்றை உருவாக்கி இருக்கி றது. இது 21 ஆயிரத்து 936 சதுர மீட்டர் பரப்பளவு உடை யதாகும். அடுத்த ஆண்டு சர் தேச குடும்ப ஆண்டாக கடைபி டிக்கப்படுகிறது. இதையொட்டி இந்த போஸ்டர் உருவாக்கப் பட்டு இருக்கிறது. இது 6 கால்பந்தாட்ட மைதானத்தை மறைக்கும் அளவு பிரமாண்ட மானதாக இருப்பதோடு கின்ன சிலும் இடம்பெற்றுவிட்டது. ஆங்காங் இளைஞர் அமைப்பை சேர்ந்தவர்கள் இதை தயாரித்து இருக்கிறார் கள். இந்த போஸ்டரை 30 ஆயிரம் கார்டுகளாக துண் டாக்கி ஆசிரியர்கள், மாணவர் கள், குடும்பத்தினர் பலருக்கும் அனுப்பவும் திட்டமிட்டு இருக் கிறார்கள். இப்போது இந்த போஸ்டர் மிகப்பெரிய திறந்த வெளி மைதானத்தில் 6 மடிப் பாக மடித்து போடப்பட்டு உள்ளது. 20 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவு போஸ்டரை ஜப்பான் உருவாக்கி சாதனை படைத்திருந்தது. அதை ஆங் காங் முறியடித்துவிட்டது.

விண்வெளியில் மருத்துவ ஆராய்ச்சி!

விண்வெளி வீரர்கள் பல நாட்கள் தொடர்ந்து பூமியை சுற்றிக்கொண்டே இருப்பதால் அவர்களுக்கு இரத்த சோகை ஏற்படுகின்றது. இதுபற்றியும் விண்வெளி வீரர்களுக்கு ஏற்படும் மற்ற நோய்கள் பற்றியும்

ஆராய 7 அமெரிக்க வீரர்கள் 'கொலம்பியா' கலத்தில் பூமியை சுற்றி வருகிறார்கள்.

விண்வெளி கலத்தில் 48 எலிகளும் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. இந்த எலிகளின் வாலில் இருந்து இரத்தம் எடுத்து பரிசோதனை செய்யப்படுகிறது. விண்வெளி வீரர்களிடம் இருந்தும் ஊசி மூலம் இரத்தம் எடுக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டது. ஆனால் இனிமேல் விண்வெளி வீரர்களிடம் இருந்து இரத்தம் எடுக்கப்பட மாட்டாது. இதனால் வீரர்கள் நிம்மதி அடைந்து உள்ளனர்.

விண்வெளியில் எடையற்ற தன்மை இருக்கும்போது, நுரையீரல் எப்படி செயல்படுகிறது என்பது குறித்து மருத்துவ பரிசோதனைகளும், ஆராய்ச்சியும் செய்யப்பட்டது.

மாயமாய் மறைந்த கப்பல்!

அமெரிக்காவின் 'ஸ்கார்பியன்' என்ற நீர்மூழ்கி கப்பல் 25 ஆண்டுக்கு முன் திடீரென்று காணாமல் போனது. அட்லாண்டிக் கடலில் அசோரஸ் தீவில் இருந்து 400 மைல் தொலைவில் நின்றிருந்தபோது அந்தக் கப்பல் மாயமானது.

கடந்த 25 ஆண்டுகளாக தேடிவந்த அந்த கப்பலை இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஸ்கார்ப்பியன் கப்பலில் குண்டு வெடித்து நடத்திய சோதனையின்போது ஒரு குண்டு கப்பலுக்குள்ளேயே வெடித்து இருக்கிறது. இதனால் கப்பல் 2 ஆக உடைந்து நீரில் மூழ்கியது. கப்பலில் இருந்த 99 வீரர்களும் செத்துப் போனார்கள். இப்போது உடைந்துபோன கப்பல் கடலில் 10 ஆயிரம் அடி ஆழத்தில் கிடப்பதை கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ராணி காமிக்ஸ்-226
(மாதம் இருமுறை இதழ்)
நவம்பர் 16-30
1993

முகமூடிவீரர்
மாயாவி
தோன்றும்

Tex Sampath Tirupur

காரில் வெடிகுண்டு

பெங்காலியாவின் ஜனாதிபதி லூகாவை கொலை செய்ய சில தீவிரவாதிகள் அவரது காருக்கு வெடிகுண்டு வைத்தார்கள்.
டமால்
நல்லவேளையாக ஜனாதிபதி அந்தக் காரில் இல்லை...
அந்தத் தீவிரவாதிகள் காட்டுக்குள் முகாமிட்டிருந்ததை முகமூடிவீரர் மாயாவி பார்த்தார்.
அந்தப் பயங்கரமான தீவிரவாதிக் கூட்டம் காட்டுக்குள் வெடிகுண்டு சோதனைகளை நடத்தினார்கள்.
டமால்
ஒரு நாள் மாயாவி தீவிரவாதிகளை மடக்கிப் பிடித்தார்.
அனைவரையும் ஜனாதிபதி லூகாவிடம் அழைத்துச் சென்றார்.
மறுநாள் பத்திரிகையில் செய்தி வந்தது.
காட்டுக்குள் முகாமிட்டிருந்த 50 பயங்கரத் தீவிரவாதிகள் திடீர் கைது!
இவர்கள்தான் உங்கள் காருக்கு வெடிகுண்டு வைத்தவர்கள்!

தீவிரவாதிகள் தலைமையகத்தில் இருந்து இவர்களுக்கு கட்டளை பறந்து கொண்டிருக்கிறது!
தீவிரவாதிகளுக்கு தேவையான பணம், ஆயுதங்களை அவர்கள் கொடுத்து வருகிறார்கள்!
உங்கள் தலைவன் யார்?
உயிர் போனாலும் சொல்லமாட்டோம்!
எப்படி வரவழைக்க வேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும்!
இவர்களை தூக்கிலிட வேண்டும்!
!
சொல்! உங்கள் தலைவன் யார்?
உண்மையைச் சொன்னால் தண்டனை குறையும்!
ஒரே பதில்தான்! தெரியாது!
ஜனாதிபதி கேட்டும் சொல்ல மறுக்கிறாயா?
சோப்பும் தண்ணீரும் கொடுத்தால் சொல்லிவிடுவாய்?

மாயாவி சோப்புத்துண்டை அவன் வாயில் திணித்தார்.
டேய்...! மரியாதையாக உண்மையைச் சொல்லிவிடு!
ஆ....! ஆ....!
படார்...!
சோப்புத் தண்ணீருக்குக்கூட அவன் மசிய வில்லையே!
அதுதானே!
இனி உங்களை எப்படி பேசவைப்பது என்று எங்களுக்குத் தெரியும்!
யார் உங்கள் தலைவன்? ம்... சொல்!
மாயாவி இருவரையும் கழுத்தைப் பிடித்துத் தூக்கினார்.

உங்கள் தலைவன் யார்?
எங்கே இருக்கிறான்?
இருவரும் கல்லுப்போல அமர்ந்திருந்தார்கள்.
இனி இவர்களை சிறையில் அடைக்க வேண்டியதுதான்!
அவர்களை என்னிடம் ஒப்படையுங்கள்!
விசாரிக்கவேண்டிய விதத்தில் விசாரித்தால் உண்மை வரும்!
இவர்களை வெளியே கொண்டு செல்கிறேன்!
மாயாவி இருவரையும் தர தரவென்று இழுத்துப் போனார்.
மாயாவி இருவரையும் தனி அறைக்கு அழைத்துப் போனார்.
இருவரின் கைகளையும் இரும்புச் சங்கிலியில் கட்டினார்.
!
!
இப்பொழுது உங்களை பேச வைக்கிறேன், பாருங்கள்!

இது ஒரு இரகசிய அறை! இங்கே நீங்கள் காட்டுக் கத்தல் கத்தினாலும் வெளியே கேட்காது!
டேய்! உங்கள் தலைவன் யார் என்று சொல்கிறீர்களா? இல்லை, உயிரைவிடப் போகிறீர்களா?
ஆ... வந்...!
வாயை மூடு!
நான் அமைதியான முறையில் விசாரிக்கலாம் என நினைத்தேன்!
நீங்கள் சம்மதிக்கவில்லை இனி என் முறையை காட்ட வேண்டியதுதான்!
இது ரிமோட்கண்ட்ரோல் மூலம் வெடிக்கும் வெடிகுண்டு! எத்தனை பேரை இதை வைத்து கொன்றிருப்பீர்கள்!

இந்த அறைச்சுவர் ஆறடி அகலம் உள்ள கருங்கல் சுவர்! குண்டு வெடித்தாலும் ஒன்றும் ஆகாது!
உண்மையை சொல்கிறீர்களா? குண்டை வெடிக்க வைக்கட்டுமா?
வெடி குண்டைப் பற்றி உங்களுக்கு சொல்லத் தேவையில்லை!
வெடிகுண்டில் இருக்கும் பொத்தானை பிடித்து முதலில் இழுக்க வேண்டும்!
பிறகு குறிப்பிட்ட இடத்தில் இருந்து ரிமோட்கண்ட்ரோலில் உள்ள சுவிட்சை தட்டினால் போதும் அல்லவா?
ஆ....!
உங்கள் குண்டே உங்கள் உயிரை குடிக்கப் போகிறது!
வந்...து!
டேய் அவன் சும்மா மிரட்டிப் பார்க்கிறான்!
மிரட்டுகிறேனா? இப்பொழுது பார்! நான் வெளியே இருந்து சுவிட்சை அழுத்துகிறேன்! வரட்டுமா?
நிறுத்து! இது கொலைக்கு சமம்!
ஜனாதிபதி லூகா மாயாவியை தடுக்கப் பார்த்தார்.

என் இடத்தில் கொலை நடக்க சம்மதிக்க மாட்டேன்!
இவர்கள் உங்களை கொல்ல சதி 'செய்தவர்கள்!
இவர்களை தண்டிக் காமல் விட்டால் உங்களுக்குத்தான் ஆபத்து!
அவர்களை நீதிமன்றம் தண்டிக்கட்டும்!
ஆகா! ஜனாதிபதி இருக்கும்வரை எங்கள் உயிருக்கு ஆபத் தில்லை!
ஆமாம்!
இவர்களை விடுதலை செய்து சிறையில் அடை! நான் சொல்கிறேன்!
??
மன்னிக்க வேண்டும்! அதற்கு நான் சம்மதிக்க மாட்டேன்!
ஆ...!
படார்...!
ஜனாதிபதி மாயாவியிடம் இருந்து ரிமோட் கண்ட்ரோலை பிடுங்க முயன்றார்.
இப்போது உண்மையை சொல்கிறீர்களா? இல்லை சாகப் போகிறீர்களா?

ஆ... ஜனாதிபதியையே அடித்து விட்டாயே!
பத்து எண்ணுவதற்குள் உங்கள் தலைவன் யார் என்று சொல்லிவிட வேண்டும். 1... 2... 3...!
4... 5... 6... 7... 8... 9...
மாயாவி வெளியே வந்து அறைக் கதவை மூடினார்.
படார்...!
10...!
ஏய்... அவன் கதவை மூடிவிட்டான்! நிறுத்து... நிறுத்து...!
நாங்கள் உண்மையை சொல்லிவிடு கிறோம்!
நாங்கள் உண்மையை சொல்லிவிடு கிறோம்!
மாயாவி! உன் சாமர்த்தியத்தை பாராட்டுகிறேன்!

ஓகா! உங்கள் நடிப்பு அபாரம்!
நீயும் என்னை தாக்குவது போல நடித்துவிட்டாயே!
சரி! நீங்கள் நினைவு இழந்தவர் போல் படுத்துக் கொள்ளுங்கள்!
மாயாவி கதவை திறந்து உள்ளே வந்தார்.
சொல்! ஜனாதிபதியை கொல்ல சதி செய்தது யார்?
முதலில் வெடிகுண்டை அப்புறப் படுத்து சொல் கிறோம்!
எங்களை நம்பு! உண்மையை சொல்லி விடுகிறோம்!
நம்பிக்கைகு இடம் இல்லை! உண்மையை சொல்! இல்லை குண்டு வெடித்துவிடும்!

மாயாவி மீண்டும் அறைக் கதவை சாத்திவிட்டு வெளியே வந்தார்.
சொல்கிறீர்களா? இல்லை...!
உண்மையைச் சொன்னபிறகு எங்களை உயிரோடு விடு வாய் என்று எப்படி நம்புவது?
இன்னும் ஐந்து எண்ணு வதற்குள் உண்மை யைச் சொல்லிவிட வேண்டும்! 1... 2... 3...!
4...!
தாராசிம்மா...!
ஆ...!
இருவரும் உள்ளே இருந்து குரல் கொடுத்தார்கள்.
தாராசிம்மா...!
தாராசிம்மா என்பது ஒரு நாடு!
தாராசிம்மா
ஐவோரிலானா
பெங்காலியா
N
தாராசிம்மாவை காட்டும் படம்.
ஜனாதிபதி லூகாவை கொல்ல சதி செய்தது தாராசிம்மாவின் ஜெனரல் மார்க்கா...?
ஆமாம்!
ஜெனரல் மார்க்!
திரும்பவும் மோதுகிறானா?

Tex Sampath Tirupur

மாயாவி அவன் அட்டூழியத்தை அடக்கி அவனை இழுத்துச் சென்றார்.
என்னை எங்கே அழைத்துப் போகிறாய்?
காட்டுவாசிகளின் தலைவரிடம்!
மாயாவி மார்க்கை காட்டுத் தலைவனிடம் அழைத்து வந்தார்.
தலைவரே! லூகா தேர்தல் மூலமாக ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப் பட்டவர்! ஆனால் இவன் லூகாவை அழித்துவிட்டு ஜனாதிபதியாக ஆசைப்படுகிறான்!
தேர்தல் என்றதும் காட்டு வாசிகள் புரியாமல் விழித் தார்கள்.
தேர்தல்...?
இருவரையும் மோதவிட வேண்டியது தான்!
இல்லை தலைவரே! லூகா அப்பாவி மார்க் கொலை காரன்...!
தலைவரே! வேறு ஏதாவது வழி இருக்கிறதா?
இல்லை மாயாவி! இருவரும் மோதுவதைத் தவிர வேறு வழியில்லை!
லூகா! உங்களுக்காக நான் மோதுகிறேன்!
இல்லை! என் மக்களுக்காக நானே மோதுகிறேன்!

ஏய்... உன்னை என்ன செய்கிறேன் பார்!
இருவரும் சண்டைக்கு தயாரானார்கள்.
சண்டையின் முடிவில் ஜனாதிபதி லூகா வெற்றி பெற்றார்.
இவனை கொல்ல வேண்டும்!
ஆ...!
வேண்டாம்! யாரையும் சாகடிக்கக்கூடாது!
லூகா! தூள் பறத்திவிட்டீர்களே!
நான் கராத்தே போட்டியில் பதக்கம் பெற்றிருக்கிறேன். தெரியுமா?
தலைவரே! இனி அவர்தான் தலைவர்!
இனி அவரை அசைக்க எவனாலும் முடியாது!
ஜனாதிபதி மாளிகையில்–
மார்க் மீண்டும் என்னை வம்புக்கு இழுக்கப் பார்க்கிறான்.
உங்களை அழித்துவிட்டு ஜனாதிபதியாக துடிக்கிறான்!
அவன் திட்டம் தவிடு பொடியாகி விடுகின்றதே!
நேரம் நமக்கு சாதகமாக இருக்கிறது!

அவனை என்ன செய்யலாம்?
அவன் கொட்டத்தை அடக்க வேறு வழி இருக்கிறது!
மார்க்கை பெங்காலியா சிறைக்கு கொண்டு வந்தால் என்ன?
அவ்வளவுதான்! உடனே சர்வாதிகாரியாக மாறி விடுவான்!
அவன் தாராசிம்மாவில் டக்ளசிடம் பயிற்சி பெற்று இருக்கிறான்.
அவன் ஒரு பக்கா சர்வாதிகாரி!
அவர்கள் இருவரும் சேர்ந்து உங்கள் தலைக்கு குறிவைத்திருக் கிறார்கள்!
காட்டிலிருக்கும் அவர்களுடைய முகாமுக்கு வெளிநாடுகளில் இருந்துகூட ஆட்கள் வருகிறார்கள். உதவுகிறார்கள்!
உங்கள் உயிரை காப்பாற்றுவது என் பொறுப்பு!

சர்வாதிகாரி டக்ளஸ் உலகம் முழுக்க தன் ஆதிக்கத்தை செலுத்த நினைக்கிறான்!
அவர்கள் இருவரும் சேர்ந்து உலகையே கூறு போட பார்க்கிறார்களா?
ஆமாம்! இருவருமே எமகாதகர்கள்!
அவர்களுக்கு இந்த தேர்தல் முறைகள் எல்லாம் ஒத்து வருவதில்லை! ஆயுதத்தால் ஆட்சி அமைக்க நினைக்கிறார்கள்!
நாட்டு தலைவர்களை எல்லாம் கொன்று விட்டு ஆட்சியை பிடிக்க திட்டம் வகுக்கிறார்கள்!
நான் தாராசிம்மாவுக்குள் நுழைய முடியாது: நுழைந்தால் போர் வரும்!
வேண்டாம் லூகா!
அவர்களை நானே இழுத்து வருகிறேன்!
அவர்கள் எல்லையில் படைகளை நிறுத்தியிருக்கிறார்களே?
நான் எப்படியும் உள்ளே நுழைந்து விடுவேன்!
மாயாவி உறுதியாகச் சொன்னார்.

மார்க்குடன் மோத வேண்டுமானால் எளிதல்ல! அவன் 300 பவுண்டு எடை இருப்பான்!
அவனை முறியடித்துக் காட்டுகிறேன் பாருங்கள்!
மாயாவி விளையாடாதே! நான் ஜனாதிபதி கட்டளையிடுகிறேன். நீ அங்கே போக வேண்டாம்!
இல்லை லூகா!
என்னை நிறுத்த உங்களால் முடியாது. அவன் திரும்பவும் உங்களை கொல்ல வருவான்!
தாரசிம்மாவில்— டக்ளசும், மார்க்கும் சந்தித்தார்கள்.
மார்க்! நான் கஷ்டப்பட்டு பெங்காலியா காட்டுக்குள் தீவிரவாதிகளை முகாமிட செய்திருக்கிறேன்! முகாம் எப்படி இருக்கிறது?
முகாமுக்கு எந்த ஆபத்தும் இல்லை!
ஆபத்து இல்லையா? எவனோ ஒரு முகமூடி முகாமையே அழித்து 50 பேரை சிறையில் அடைத்திருக்கிறான்!
முகமூடியா?
மார்க்! என்னிடம் மறைக்கப் பார்க்கிறாயா? யாரது?

முகமூடி....! அவன் காட்டு மனிதன்! பெயர் மாயாவி! லூகாவின் நண்பன்! நமக்கு ஜென்ம விரோதி!
காட்டு மனிதனா? மாயாவியா?
அவன் எப்படியோ நம் முகாமை கண்டுபிடித்து விட்டான்.! என்னை நம்பு!
இவனுக்கு மருத்துவ சிகிச்சை தேவைப் படுகிறது!
ஓ.கே. தலைவரே!
டக்ளசு தன் ஆளுக்கு இரகசிய கட்டளையிட்டான்.
அதேநேரம்–
மிஸ்டர் வால்கர்! தற்போது ஒரு பழைய விமானம்தான் இருக்கிறது!
பரவா யில்லை!
மாயாவியும் டெவிலும் புறப்பட்டார்கள்.
தாராசிம்மா எல்லை வரைக்கும் இந்த விமானம் பறக்கு மல்லவா?
தாராளமாக! போய்விட்டு திரும்பியும்விடலாம்!

மாயாவி டெவிலுடன் விமானத்தில் புறப்பட்டார்.
ரொம்ப நன்றி கேப்டன்!
தாராசிம்மா விமான தளத்தில்—
பெங்காலியாவின் விமானம் நம் நாட்டு எல்லையில் வட்டமிடுகிறது!
திரும்பி போகச் சொல். இல்லாவிட்டால் சுட்டுத் தள்ளுவோம் என்று எச்சரிக்கை விடு!
ஏய்...! மரியாதையாக திரும்பி போய் விடு! இல்லாவிட்டால் சுட்டு வீழ்த்தி விடுவோம்!
என்னை வீழ்த்த உங்களால் முடியாது!
என்னை வீழ்த்த உங்களால் முடியாது!
??!!
தாராசிம்மா எல்லையில் மாயாவி பறந்து கொண்டிருந்தார்.
மாயாவி பதிலடி கொடுத்தார்.
இந்த விமானம் பெங்காலியாவுக்குச் சொந்தமானது!
மாயாவி விமானத்தை நோக்கி சரமாரியாக சுட்டார்கள்.
டுமீல்...!
டுமீல்...!
டுமீல்!
பழைய விமானம் நம் நாட்டுக் கொடியை பறக்கவிட்டிருக்கிறது! போர் விமானத்தை உடனே கிளப்புங்கள்!


நம் எல்லையில் பழைய விமானம் ஒன்று வட்டமிடுகிறது. உடனே அதை சுட்டு வீழ்த்து!
ஓ.கே. சார்!
திடீரென்று மாயாவி டெவிலை தூக்கிக்கொண்டு விமானத்தில் இருந்து குதித்தார்.
டெவில்! நாம் சிறிது நேரத்தில் தரை இறங்கி விடலாம்!
மாயாவி உடனே பாராசூட்டை தட்டிவிட்டார்.
தாராசிம்மாவை நெருங்கிவிட்டோம் டெவில்!
மாயாவியின் விமானம் தாராசிம்மாவில் ஓர் இடத்தில் வந்து விழுந்தது.
டமார்...!
டெவில்! இதோ வந்து விட்டோம்!

போர் விமானம் புறப் படுவதற்குள் அடுத்த கட்டளை மின்னல் வேகத்தில் வந்தது.
TARASHIA
D4
புறப்படத் தேவையில்லை! எதிரி விமானம் தரையில் விழுந்து நொறுங்கிவிட்டது!
உடனே இராணுவ வீரர்கள் விமானம் நொறுங்கி விழுந்த இடத்துக்கு புறப் பட்டார்கள்.
விமானம்! வெடித்துச் சிதறவில்லையே!
பெட்ரோல் இல்லாமல் விமானம் இறங்கி யிருக்கக்கூடும்!
ஏய்...! அந்த மரத்தில் பார்த்தாயா? பாராசூட் கிடக்கிறது. எதிரி அதன் மூலம் இறங்கியிருக் கிறான்!
அவன் இந்தப் பகுதியில் இருக்க வேண்டும். சுற்றித் தேடுங்கள்!
மாயாவி மரங்களுக்கு இடையே பதுங்கியிருந்தார்.
அவன் ஏன் விமானத்தை இங்கே இறக்கி யிருக்கிறான். யார் அவன்?
வாருங்கள் அவனை தேடலாம்!
வீரர்கள் காடு முழுக்க மாயாவியை தேடினார்கள்.
இங்கே ஏதோ சத்தம் கேட்கிறது!
அடுத்த நொடி—
நான்தான் இங்கே இருக்கிறேன்!
கும்...!
மாயாவியின் இரும்புக் கை அவனை பதம் பார்த்தது.

அவன் அலறலைக் கேட்டு இன்னொருவன் வந்தான்.
ஏய்...! என்ன நடந்தது?
விமானத்தில் இதைத்தவிர எந்த தடயமும் சிக்க வில்லையே?
ஜெனரல் மார்க்! நான் உன்னை சந்திக்க வரு கிறேன்!
ஒரே ஒரு துண்டுச் சீட்டை மட்டும் எடுத்தார்கள்.
ஜெனரல் மார்க்! நான் உன்னை சந்திக்க வரு கிறேன்!
??!!
சார்! இங்கே வந்து பாருங்கள்!
சார்! இவன் தாடையை பார்த்தீர்களா?
ஆ...! அதே மண்டை ஓட்டுக் குறி!
புதருக்குள் மயங்கிக் கிடந்தவன் தாடையில் மண்டை ஓட்டுக் குறி இருந்தது.

சார்! விமானத்தை கண்டுபிடித்துவிட்டோம். ஆனால் விமானத்தில் யாரும் இல்லை! ஒரே ஒரு குறிப்பு மட்டும் கிடைத்திருக்கிறது!
வீரர்கள் உடனே தகவல் கொடுத்தார்கள்.
அந்த நேரம் பார்த்து மாயாவி அவர்களின் ஜீப்பை எடுத்துக்கொண்டு பறந்தார்.
?!
ஏய்...! கார் எங்களுடையது!
ஏய்...!
டெவில்! அவர்கள் நிச்சயம் சுட்டுத் தள்ளுவார்கள். குனிந்து கொள்!
ஏய்... பெட்ரோல் டேங்கை சுட்டு விடாதே! அவனை மட்டும் சுட்டுத் தள்ளு!

சுடுடா...!
ஆள் பார்க்க வித்தியாசமாக இருக்கிறானே!
சே...! தப்பி விட்டானே!
சார்! விமானத்தில் வந்தவன் எங்கள் ஜீப்பை எடுத்துக் கொண்டு பறந்துவிட்டான்!
கட்டளை வந்தது.
நீங்கள் உடனே மேற்கு 6-வது பாதை வழியாக சென்று அவனை மடக்குங்கள்!
நீங்கள் உடனே மேற்கே 6-வது பாதை வழியாக சென்று அவனை மடக்குங்கள்!
டெவில் கேட்டாயா!
காரில் இருந்த வயர்லெசிலும் அவர்கள் பேச்சு கேட்டது.
நாம் சாலையில் சென்றால்தானே அவர்கள் நம்மை மடக்குவார்கள்!
மாயாவி ஜீப்பை குறுக்குப் பாதையில் விரட்டினார்.

Tex Sampath Tirupur

அவனை நிறுத்து! சுட்டுக் கொல்லு! ஆனால் காரை சேதப்படுத்தி விடாதே!
கெலிகாப்டர் மாயாவியின் ஜீப்பை விரட்டி வந்தது.
கேப்டன்! உங்கள் காரில் படாமல் அவனை எப்படி சுட்டு வீழ்த்துவது?
அவனை சுட்டால் கார் நிச்சயமாக சேதமாகும்!
அவனை விரட்டியே வா! தப்பிக்க விட்டு விடாதே!
அவனை தொடர்ந்து வா!
ஓ.கே. சார்!
அவர்களின் உரையாடலை மாயாவி காரில் இருக்கும் வயர்லெஸ் மூலம் கேட்டுக் கொண்டுதான் இருந்தார்.
கெலிகாப்டரில் இருந்து செய்தி வந்து கொண்டே இருந்தது.
அவனை விரட்டிச் சென்றுதான் பிடிக்க முடியும்!
அவனை விரட்டிச் சென்றுதான் பிடிக்க முடியும்!

அப்போது ஓர் இராணுவ ஜீப் அங்கே வந்தது.
நல்லவேளை! ஜீப் வருகிறது! இதன்மூலமாக அவனை மடக்கி விடலாம்!
வீரர்களுடன் ஓர் ஜீப் வருகிறது!
மூன்றாம் பாதைக்கு உடனே வாருங்கள்!
வீரர்களோடா?
பைலட்! நீ அவனை பின்தொடர்ந்து சென்று பாதையை மட்டும் எங்களுக்கு தெரிவித்துக்கொண்டிரு!
ஓ.கே. சார்!
டெவில்! நம்மை மடக்க திட்டம் நடக்கிறது! குதிக்கத் தயாரா இரு!
திடீரென்று ஓர் இடத்தில் மாயாவியின் ஜீப் கவிழ்ந்தது.
கேப்டன்! உங்கள் கார் திடீரென்று கவிழ்ந்துவிட்டது!
ஹெலிகாப்டரில் இருந்து செய்தி பறந்தது.
என்ன? என் கார் கவிழ்ந்து விட்டதா? அவன் இருக்கிறானா? தப்பிச் சென்று விட்டானா?
அவனைப் பார்க்க முடியவில்லை!

என் கார் கவிழ்ந்து விட்டது! அவன் என்ன ஆனான்? தேடிப் பார்!
உடனே கெலிகாப்டரை தரை இறக்கிவிட்டு ஜீப்பை நெருங்கினான்.
யார் அங்கே? காருக்குள் யாரது?
யாரையும் காணோமே!
லொள்...! லொள்...!
திடீரென்று டெவில் அவன் மீது பாய்ந்தது.
இதோ நான் இங்கு இருக்கிறேன்!
ஆ...!
லொள்!
ஒரு மறைவில் இருந்து மாயாவி வெளிப்பட்டார்.
எங்களை தொடர்ந்து வந்த உன்னை திசை திருப்பத்தான் இந்த விபத்தை ஏற்படுத்தினேன்!
யார் நீ?
நீ என்னை சுட வேண்டும். ஆனால் கார் சேதமடையக் கூடாது என்று கட்டளை வந்ததல்லவா? அதனால் தனியே வந்திருக்கிறேன்!
அதோ கேப்டன் வந்துவிட்டாரே!

அதோ அவன் அங்கு இருக்கிறான்! என் கார்... அய்யோ...!
அவர்கள் அருகில் வந்து விட்டார்கள்! சீக்கிரம் கெலி காப்டரை கிளப்பு!
?
நாம் எங்கே போக வேண்டும்!
ஏறு சொல்கிறேன்!
!!
ஜீப் அருகே வர, கெலிகாப்டர். கிளம்பியது.
உடனே வீரர்கள் கெலிகாப்டரை சுட துப்பாக்கியை தூக்கினார்கள்.
ஏய்... சுடாதீர்கள்! உள்ளே பைலட் இருக்கிறான்!
அய்யோ! என் கார் இந்தக் கதி ஆகி விட்டதே!
கேப்டன் புலம்பினா

கெலிகாப்டரில்— பைலட்டை மிரட்டி கெலிகாப்டரை செலுத்திக்கொண்டிருந்தார், மாயாவி.
இதுதான் கோட்டை. எங்கே தரை இறங்க வேண்டும்?
கோட்டையின் அருகே இறங்கு!
இங்கேயா?
காட்டில் இருந்து கேப்டன் தகவல் பரப்பினான்
அவன் கெலிகாப்டர் 349-ல் தப்பிவிட்டான். அதனால கெலிகாப்டர் 349ஐ கண்காணிக்க வேண்டும்!
அனைவரும் கெலிகாப்டர் 349ஐ கண்காணியுங்கள்!
எல்லாருடைய கவனமும் இப்போது என் கெலிகாப்டரின் மீதுதான்!
இங்கே இறங்கு!
இது எங்கள் சர்வாதிகாரியின் கோட்டை!
ரொம்ப நல்லது!
349
கெலிகாப்டர் கோட்டைக்கு அருகே இறங்கியது.
உன் உடையைக் கழற்றிக் கொடு!
உடையை எதற்காக கேட்கிறாய்?

தாராசிம்மாவில்
சே! காரை நொறுக்கிவிட்டு என் கெலிகாப்டரிலேயே தப்பி விட்டானா?
சார்! கேப்டன் வந்திருக்கிறார்
கும்...!
கேப்டன் வந்தார்.
கேப்டன்! இது எப்படி நடந்தது?
அது வந்து.. வந்து... எனக்குத் தெரியாது!
நீ கட்டளை பிறப்பித்து அவனை விரட்டியிருக்கிறாய் பிறகு ஏன் தெரியாது என்கிறாய்!
சார்! ஒரு சிறிய பெங்காலியா விமானம் நம் எல்லையில் பறந்தது!
நாங்கள் எச்சரித்தோம்! பிறகு அதனை சுட்டு வீழ்த்தினோம்!
டுமீல்! டுமீல்!

நொறுங்கிய விமானத்து அருகே சென்று பார்ப்பதற்குள் அவன் என் காரை எடுத்து நொடியில் பறந்துவிட்டான்!
!
அவனை தப்பிக்க விட்டுவிட்டாய்! பிறகு ஏன் அவனை தேடவில்லை?
இல்லை சார்! கெலிகாப்டர் மூலம் தேட கட்டளை யிட்டேன்!
இப்போது அவன் அந்த கெலிகாப்டரையும் பைலட்டையும் கடத்திச் சென்று விட்டான்!
ஆமாம் சார்!
தனி ஒருவனாக வந்து இவ்வளவு வித்தைகளையும் காட்டிவிட்டுச் சென்று விட்டான்!
?
வெளியே இருந்து ஜெனரல் மார்க் கேட்டுக்கொண்டிருந்தான்.
இதைச் சொல்ல உனக்கு வெட்கமாக இல்லை! முட்டாள்!
ஆ...! சார்!
டக்ளசு ஆத்திரத்தில் கேப்டனின் கழுத்தை நெரித்தான்.

Tex Sampath Tirupur

ஜெனரல்
மார்க்!
நான் உன்னை
சந்திக்க
வருகிறேன்!
மார்க்! இதற்கு என்ன அர்த்தம்?
ஆ...ஆ...!
சொல்லு! இவன் யார்?
திடீரென்று மார்க் ஒரு மாதிரி வந்தான். வாயில் நுரை தள்ளியது.
ஜெனரல் மார்க்! நான் உன்னை சந்திக்க வருகிறேன்!
ஆ...! என் தலை உருளுகிறதே!
டாக்டர்! இவனை கொஞ்சம் அமைதிப்படுத் துங்கள்!
ஓ.கே. சார்!

மார்க் அஞ்சா நெஞ்சன்! இதைப் பார்த்ததும் ஏன் இப்படி பதட்டப் படுகிறான்!
சார்! இதில் இருக்கும் மண்டை ஓட்டுக் குறி நம் வீரர்களில் ஒருத்தன் தாடையிலும் இருந்தது!
இந்த மண்டை ஓட்டுக் குறி பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?
இல்லை சார்!
தெரியாது சார்!
கேப்டன் இராணுவ வீரர்களிடம் விசாரித்தார்.
நம் வீரன் ஒருவன் தாடையில் இந்தக் குறி இருக்கிறது. தெரியுமா?
இது...இது...!
இது மாயாவியின் முத்திரை! மாயாவிக்கு சாவு என்பதே இல்லை!
ஒரு வீரன் அந்த குறியைப் பற்றிச் சொன்னார்.
மார்க்குக்கு தீவிர பரிசோதனை நடந்தது.
ஜெனரல் மார்க்! நான் உன்னை சந்திக்க வருகிறேன்!
சார்! இந்தக் குறி மாயாவி என்பவனுக்குச் சொந்தமானதாம்! அவன் சாகா வரம் பெற்ற வனாம்!
?
சார்! மார்க் இப்பொழுது அமைதி அடைந்து விட்டார்!
நல்லது!

மார்க்! மாயாவியை உனக்குத் தெரியுமா? அவன் யார்?
திரும்பவும் கத்த ஆரம் பித்துவிட் டாரே!
ஆ...ஆ...!
மாயாவி பெயரைக் கேட்டதும் மார்க் கத்தி ஆர்ப்பாட்டம் செய்தான்.
அதேநேரம் கோட்டைக்கு வெளி
என் வேலை முடிந்ததும் உன் உடையை திரும்பக் கொடுத்துவிடுகிறேன்!
நீ ஒரு இரகசிய உளவாளி... உன்னை...
பைலட் மாயாவி
தாக்க முயன்றா
மாயாவியின் இரும்புக் கை அவனை தாக்கியது
கும்...!
பைலட்! என்னை மன்னித்துவிடு! இதைத் தவிர வேறு வழியில்லை.
உடனே மாயாவி டெவிலை அழைத்துக் கொண்டு கோட்டைக்குள் நுழைய முயன்றார்.
என்ன டெவில்! எனக்கு இந்த உடை பொருத்தமாக இல்லையா?
லொள்...!
நான் இப்போது பைலட்! அதற்குரிய கார்டு பைக்குள் இருக்கிறது!

ரய்...! ஏன்
ல்லாரையும்
சோதனை
செய்கிறாய்?
பெரியவரே! இரகசிய
உளவாளி ஒருவன் நம்
நாட்டுக்குள் புகுந்து
விட்டான்!
என்னைத்தான்
குறிப்பிடுகிறார்கள்!
உங்கள் அடையாள
அட்டையை
காட்டுங்கள்!
மாயாவி
அடையாள அட்டையை
எடுத்துக் காட்டினார்.
உங்கள் கண்ணாடியை
கழற்றுங்கள்.
கண்ணின் நிறத்தை
பார்க்க
வேண்டும்!
பைலட்டுக்கு என்ன
நிற கண்கள் என்று
தெரியவில்லையே!
மன்னிக்கவும்!
கண்ணாடி
எல்லாம் கழற்ற
முடியாது!
முடியாதா?
LT. TROG
சார்! நாங்கள் கேட்டால்
நீங்கள் கழற்றிக் காட்ட
வேண்டும்!
மன்னிக்கவும்.
அது முடியாது!
உன் குரல் வேறு மாதிரி
இருக்கிறது. நீதான் உளவாளி!
உன்னை கைது
செய்கிறேன்!

முட்டாள்! என்னைப் பார்த்து உளவாளி என்றா சொல்கிறாய்?
கும்...!
ஆ...!
மாயாவி அவ்னை தாக்கினார்.
ஏய்...! இங்கே என்ன நடந்தது?
சார்! நான் பைலட்! என்னைப் பார்த்து இரகசிய உளவாளி என்கிறான்!
ஆபீசரை அவமானப் படுத்தியதற்காக இவனை கைது செய் யுங்கள்!
கீழே விழுந்தவன் தாடை யில் மண்டை ஓட்டுக் குறி
அந்த நேரம் கோட்டைக்கு வெளியே மயங் .கிக் கிடந்த பைலட் எழுந்தான். நேராக கோட்டை வாசலுக்கு வந்தான்.
?
அனைவரும் அதிசயமாக அவனைப் பார்த்தார்கள்.

நான பைலட்! சிறிது நேரத்திற்கு முன் ஒருவன் என் உடையை அணிந்து கொண்டு நாயுடன் வந்தானா? அவன்தான் உளவாளி!
பைலட்! உன் தாடையில் மண்டை ஓட்டுக் குறி இருக்கிறதே!
ஆமாம்! அந்த முகமூடி என்னை தாக்கிவிட்டான்!
இதே குறி அவன் தாடையிலும் இருக்கிறதே!
பெங்காலியாவின் உளவாளி பைலட் உடையில் ஒரு நாயுடன் கோட்டைக்குள் நுழைந்திருக்கிறான்!
பெங்காலியாவின் உளவாளி கேப்டனின் காரை விபத்துக்குள்ளாக்கிவிட்டு, ஹெலிகாப்டரை கடத்திச் சென்று, இப்போது பைலட் உடையில் இங்கே வந்திருக்கிறானாம்!
ஹா...ஹா... ஹா...!
HA
வீரர்கள் கேலியாக சிரித்தார்கள்.

உளவாளி ஜெனரல் மார்க்குக்கே சவால் விட்டிருக்கிறான். அவனைப் பார்த்தால் கை குலுக்கி நன்றி செலுத்த வேண்டும்! ஹா...ஹா...!
அப்போது மாயாவி அங்கே வந்தார்.
ஏய்...! இதோ பாருடா!
என்ன?
ஏய்... நீ கெலிகாப்டர் பைலட்டா?
ஏய்...! உன்னையும் கெலிகாப்டரையும் உ வாளி கடத்திவிட்டதா சொன்னார்களே! அவனை எங்கே?
உன்னைப் பார்க்க இரகசிய உளவா மாதிரி தெரி கிறதே!
இல்லை! அவன் என்னைவிட தடிமனாக இருப்பான்!
பைலட்! உன்னை கடத்திவிட்டதாக செய்தி வந்ததே!
இல்லையே!
உன் கெ காப்டன எங்கே

சரி! நான் அவசரமாக ஜெனரல் மார்க்கை பார்க்கவேண்டும்! எங்கே இருக்கிறார்?
அரண்மனையில்தான் இருப்பார்!
பெங்காலியாவின் உளவாளி பைலட் உடையில் நாயுடனும் உள்ளே புகுந்துவிட்டான்!
உளவாளியைப் பற்றி செய்தி வந்தது.
நீ ஏன் ஜெனரலை பார்க்கவேண்டும்?
ஏய் கொஞ்சம் பொறு!
பெங்காலியாவின் உளவாளி பைலட் உடையில் நாயுடன் உள்ளே புகுந்து விட்டான்!
அப்போதுதான் செய்தியை வீரர்கள் கேட்டனர்.
பைலட் உடை! கையில் நாய்...!
ஏய்... அவன் இங்கேதானே நின்று கொண்டிருந்தான்
எங்கே போனான்?
செய்தி வந்ததும் மாயாவி அங்கிருந்து நழுவினார்.

அவன் சற்று நேரத்திற்கு முன் எங்களுடன் பேசிக் கொண்டிருந்தானே!
கையில் நாய் வைத்திருந்தானே! எங்கே போயி ருபபான்!
ஏய்... உன்னைத் தானே!
10
நீ அவனைப் பார்த்தாயா?
நான் யாரையும் பார்க்கவில்லை
காற்றோடு காற்றாக கலந்து மறைந்து விட்டானா?
நீங்கள் சொல்கிற அடையாளத்துடன் யாரும் வர வில்லையே!
ஓகோ...!
மாயாவி அவனை மிரட் டிக்கொண்டிருந்தார்.
முட்டாள்! உன் கெலிகாப்டரையும் உடையையும்! அவன் தான் எடுத்துக் கொண்டானா?
?
ஆமாம்! என்னை தாக்கிவிட்டு சென்றுவிட்டான்!
அதே மண்டை ஓட்டுக்குறி கோட்டை வாசல் வீரனிடம் இருக்கிறது!
அவனை நம் கோட்டை க்குள்ளே நுழைய விட்டுவிட் டீர்களே?
மார்க்...! அந்த உளவா அங்கங்கே மண்டை ஓட்டுக்குறியை பதிய வைக்கிறான்!
ஆ... மாயாவி! மாயாவி!

Tex Sampath Tirupur

டக்ளசு! என்னை காப்பாற்றுகிறேன் என்று சொல்லிவிட்டு இப்படி கட்டிப் போட்டுவிட்டாயே!
கேப்டன்! அவனை ஏன் கட்டிப் போட்டாய்?
ஓடிவிடக் கூடாதல்லவா?
முட்டாள்! அவன் எப்படி ஓடமுடியும்! இன்னும் சிறிது நேரத்தில்தான் உறக்கத்துக்குச் சென்று விடுவானே?
படார்!
சார்! மார்க் அதற்குள் தூங்கி விட்டான்!
கொர்...! கொர்...!
சரி! நம் ஆட்களை மறைந்திருக்கச் சொல்!
நம் வீரர்கள் அப்பொழுதே தயாராகிவிட்டார்கள்!
ஆகட்டும்! அந்த முகமூடியை பிடித்து என்னிடம் கொண்டு வாருங்கள். நான் படுக்கச் செல்கிறேன்!

ீரர்கள் மார்க்கைச் சுற்றியுள்ள புதர்களில்
துப்பாக்கியுடன் மறைந்திருந்தார்கள். மார்க்
தறட்டைவிட்டு தூங்கிக்கொண்டிருந்தான்.
கொர்...! கொர்...!
அப்போது மாயாவி மேலே இருந்து கீழே குதித்தார்.
மறைவிடத்தில் இருந்து மாயாவி நோட்டமிட்டார்.
கொர்...! கொர்...!
மார்க் இங்கே இருக்கிறானா?
என்னை பிடிக்கவேண்டும் என்பதற்காக மார்க்கை இங்கே வைத்திருக்கிறார்கள்!
ZZZ
கொர்... கொர்...!
ஏய்...! என்னாச்சு?
முகமூடி இன்னும் வர வில்லை!
உஸ்... சத்தம் போடாதே!
புதர்களுக்குள் மறைந்திருக்கிறீர்களா?
டக்ளசு படுக்கையில் நெளிந்து கொண்டிருந்தான். உறக்கம் வராமல் தவித்தான்.
மாயாவி! சாகா வரம் பெற்றவன்!

டக்ளசு மாயாவியை நினைத்துக்கொண்டு தூங்காமல் இருந்தான்.
மாயாவியா? ஆ...!
கேப்டன்! முகமூடி வந்தானா?
இன்னும் வரவில்லை சார்!
மாயாவி வெளியே சன்னலில் இருந்து எட்டிப் பார்த்தார்.
அதன்பிறகுதான் டக்ளசு நிம்மதியடைந்தான்.
முகமூடி வந்தால் மார்க்கை பிடித்து சென்றுவிடுவான்! எனக்கு இனி நிம்மதி!
அதற்குள் மாயாவி உள்ளே நுழைந்து டக்ளசின் வாயை பொத்தினார்.
ஆ...!

யார் நீ?
நீதான் அந்த உளவாளியா?
என்னை உனக்குத் தெரியாதா?
பலர் என்னை பலவிதமாக அழைப்பார்கள்!
நீதான் மாயாவியா?
ஆமாம்!
நான் மார்க்குக்காகத்தான் வந்திருக்கிறேன்!
அவனை எடுத்துக்கொள்! வெளியேதான் இருக்கிறான்!
உன்னையும் கூட்டிப்பேர்கவே இங்கே வந்திருக்கிறேன்!
நானா? எதற்காக?
உள்ளே டக்ளசு தூக்கத்தில் உளர்கிறாரா?

உனக்கு மார்க்தானே வேண்டும்! வா நானே பிடித்துத் தருகிறேன்!
அவன் உன் நண்பனாயிற்றே! இப்படி காட்டிக் கொடுக்கிறாயே?
உன்னை சும்மா விடமாட்டேன்!
நீ என்னைக் கொல்லப் போகிறாயா?
அய்யோ உதவி!
டக்ளசு அறையில் இருந்து கூக்குரலிட்டான்.
வெளியில் இருந்த வீரர்கள் ஒன்றும் புரியாமல் விழித்தார்கள்.
உதவி...!
தூக்கத்தில் கனவு காண்கிறாரா?
இருக்கலாம்!
சார் என்ன விசயம்?
ஒன்றும் இல்லை!
நான் நல்லாத்தான் இருக்கேன்!
இன்னும் கத்தினால், அப்படியே கழுத்தை நெரித்துவிடுவேன்.
ஆ... சரி!

ஜனாதிபதியை கொல்ல காரில் வெடிகுண்டு வைக்கச் சொன்னாயா?
நானா? இல்லை. அது மார்க்கின் வேலைதான்!
நீயும் அவனும் சேர்ந்து காட்டில் முகாம் அமைத்து தீவிர வாதிகளை உருவாக் குகிறீர்கள்?
VOOM
நானா? இல்லை! உனக்கு என்ன வேண்டும்?
உன்னுடைய லிஸ்ட்!
லிஸ்டா? என்ன லிஸ்ட்?
உலகில் உள்ள உன்னைப் போன்ற சர்வாதிகாரிகளின் லிஸ்ட் வேண்டும்!
நீங்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து உலகை ஆட்டிப் படைக்கப் பார்க்கிறீர்கள்!
அனைவரது பெயரையும் மரியாதை யாகச் சொல்!
இல்லை! எனக்கு எதுவும் தெரியாது!

நீங்கள் காட்டிலிருக்கும் தீவிரவாதிகளுக்குத் தேவையான பணம், ஆயுதங்கள், வெடிகுண்டு களை கொடுக்கிறீாகள்.
யார் சொன்னது?
யார் சொல்ல வேண்டும்!
மரியாதையாக உன் சகாக்களின் பெயரையும் இருக்கும் இடத்தையும் சொல்!
மாயாவி அவனை மிரட்டினார்.
நீ என்னை தவறாக புரிந்து கொண்டிருக்கிறாய. எனக்கு எதுவும் தெரியாது.
தெரியாதா? பத்து எண்ணுவதற்குள் சொல்லிவிட வேண்டும்!
மாயாவி அவன் மூக்குக்குள் துப்பாக்கியை திணித்தார்.
இன்னும் 5 வினாடிதான் இருக்கிறது! சொல்!
உம்... அதோ அங்கே இருக்கிறது!

டக்ளசு மாயாவியை இரும்புப் பெட்டி அறைக்கு அழைத்துச் சென்றான்.
மார்க் கொடுத்த லிஸ்டை பத்திரப்படுத்தி மட்டும்தான் வைத்தேன்
இருவருமே குற்ற வாளிகள்தான்!
அவன் கொடுத்தால் நீ எப்படி வாங்கி வைக்கலாம். முதலில் அதைத் திற!
மாயாவி லிஸ்டை பெற்றார்.
இதுவரை நீங்கள் அடித்த கொள்ளைகள், விமானக் கடத்தல் காருக்கு வெடிகுண்டு வைத்தது எல்லாமே இதில் இருக்கிறது.
இதில் எனக்கு எந்தவித சம்பந்தமும் இல்லை!
சன்னல் வழியாக தப்பி ஓடவேண்டியதுதான்!
இதில் நீயும் கையெழுத்திட்டிருக்கிறாயே!
இல்லை! அது ஏமாற்று வேலை!
திடீரென்று டக்ளசு சன்னலை நோக்கி ஓடினான்!
அங்கே டெவில் அவனை வழிமறித்தது.
லொள்...!
லொள்...!

ஆ... நாய்!
தப்பிக்கப் பார்க்கிறாயா? அது நடக்காது!
ஏய் முகமூடி! அத்தனையும் ஏமாற்று வேலை!
மரியாதையாக தப்பிச் செல்ல முயற்சி செய்!
இது என் கோட்டை! ஆயிரமாயிரம் வீரர்கள் இருக்கிறார்கள்! எச்சரிக்கை!
நான் கட்டளை யிட்டால் என்னாகும்?
ஆயிரமாயிரம் வீரர்கள் காத்திருக் கட்டும். முதலில் போனை எடு.
போனில் கெலிகாப்டரை கோட்டை வாசலில் தயாராக இருக்கச் சொல்!
கெலி காப்டரா? ஏன்?
சரி! வா வெளியே போகலாம்!
வெளியேவா? இந்த உடையிலா?

இந்த உடையில் நான் எப்படி வெளியே வருவது?
இந்த உடையில்தான் நீ வாங்கிய பதக்கம் எல்லாம் இருக்கிறதே!
நாம் இப்போது நடந்து வெளியே செல்லப் போகிறோம்!
மாயாவி அறைக் கதவை திறந்தார்.
வெளியே இருந்த வீரர்கள் அதிசயமாக பார்த்தார்கள்.
ஏய்...! துப்பாக்கியை இவனிடம் கொடுத்துவிட்டு என்னுடன் நடந்து வாருங்கள்!
டக்ளசு சொல்!
ஓ.கே. சார்!
வீரர்கள் டக்ளசின் நிலையை கண்டு சிரித்தார்கள்.
ஏய்... அங்கே பார்! டக்ளசு இரவு உடையில் நகர்வலம் வருகிறாரா? ஒரு பதக்கங்களையும் விடவில்லை போலிருக்கிறது!

அனைவரும் டக்ளசைப் பார்த்து சிரித்தார்கள்.
ஹா...ஹா...ஹா...!
ஹா...ஹா...ஹா...!
மாயாவி அரண்மனைக்கு வெளியே டக்ளசை இழுத்து வந்தார்.
ஏய்...! டக்ளசைப் பார்த்தாயா?
நகர மக்கள் அனைவரும் ஏளனமாக சிரித்தார்கள்.
ஏய்...! என்னை எங்கே இழுத்துச் செல்கிறாய்?
பிறகு சொல்கிறேன்!
கோட்டைக்கு வெளியே கெலிகாப்டர் தயாராக இருந்தது.
பைலட்! மீண்டும் நாம் சந்திக்கிறோம்! மார்க் நன்றாக தூங்குகிறானா?
ஏன் என்னை இப்படி அவமானப்படுத்துகிறாய்? உனக்கு என்ன வேண்டும்?
டக்ளசு! பிறகு சொல்கிறேன்!
கொர்...! கொர்...!

உன் கையில் விலங்கு மாட்டி அசிங்கப்படுத்த வேண்டுமா?
முதலில் துப்பாக்கியை எடு!
டக்ளசை வீழ்த்த இதுதான் சரியான நேரம்!
ஆமாம்!
அதற்குள் கேப்டன் தன் சகாக்களுடன் இரகசிய திட்டம் தீட்டினான்.
மார்க்கை அப்படியே சக்கர நாற்காலியோடு ஹெலிகாப்டரில் தூக்கி வைத்தார்கள்.
பெங்காலியாவிற்கு எதற்கு எங்களை அழைத்துச் செல்கிறாய்?
முதலில் மார்க்கை கூட்டிப் போக வேண்டும்! பிறகு பைலட் உன்னை அழைத்து வந்துவிடுவான்!
முகமூடி! நாம் பறக்க முடியாது! உன் திட்டத்தை முறியடிக்க சதி திட்டம் நடக்கிறது!
என்ன சொல்கிறாய்?
வானில் நம்மை சுட்டு வீழ்த்த ஏற்பாடு நடக்கிறது!
ஓகோ...!
கேப்டன் டக்ளசுக்கு எதிராக சூழ்ச்சி செய்து இராணுவத்தை கைப்பற்றிவிட்டான்!
நாம் வானில் அவர்களை சந்திக்கலாம்! நீ முதலில் விமானத்தை கிளப்பு!

ஏய்...! டக்ளசின் கெலிகாப்டர் புறப் பட்டுவிட்டது!
விமானப் படைக்கு தகவல் கொடு!
அவர்கள் புறப்பட்டாச்சு! நீங்களும் புறப்படுங்கள்!
கேப்டன் கட்டளையிட்டான்.
நாங்கள் என்ன செய்ய வேண்டும்?
அந்த கெலி காப்டரை சுட்டு வீழ்த்துங்கள்!
இரண்டு போர் விமானங்கள் புறப்பட்டன.
டக்ளசு! இன்னும் அரை மணியில் பெங் காலியா சென்று விடலாம்!
ஒரு குண்டு போட்டால் போதும், நாம் காலி!
இரண்டு போர் விமானங் கள் நம்மை குறி வைத்து வரு கின்றது.
அவர்களிடம் இருந்து நாம் தப்பிக்க முடியாது!
சரி! நீ உன் இஷ்டப்படி பற!
மாயாவி துப்பாக்கி யை எடுத்தார்.
போர் விமானத்தை துப்பாக்கியால் எப்படி வீழ்த்த முடியும்?
முயற்சி செய்து பார்க் கிறேன்!

ஏய்...! கெலிகாப்டர் நம் மீது மோதுவது போல் வருகிறதே!
மாயாவி விமானத்தை நோக்கி எந்திர துப்பாக்கியால் சுட்டார்.
டுமீல்...! டுமீல்...!
டுமீல்...!
மாயாவியின் குறிதவற வில்லை!
விமானம் தீப்பிடித்து எரிந்தது.
விமானத்தில் ஒன்றை வீழ்த்தி விட்டார்கள். என்ன செய்வது?
அய்யோ...! நம் பெட்ரோல் டேங்கை சுட்டு விட்டார்கள்!
விடக்கூடாது! எப்படியும் கெலிகாப்டரை வீழ்த்தியாக வேண்டும்?
நீயும் எந்திர துப்பாக்கியை எடுத்து கெலிகாப்டரை சுட்டுத்தள்ளு!
இன்னும் இரண்டு நிமிடத்தில் பெங்காலியாவின் எல்லையை அடைந்துவிடலாம்!
அடுத்த விமானம் நம்மை நோக்கி வருகிறது!

கொஞ்சம் தாழ்வாகப் பற!
கெலிகாப்டர் தாழ்வானதும், போர் விமானம் ஏமாற்றத்துடன் சென்றது.
தப்புவிட்டு விடீர்களே!
கேப்டன்! அந்த பைலட் நம்மிடமே விளையாட்டு காட்டுகிறான்!
பைலட்! நீ பலே கில்லாடியாக இருக்கிறாயே!
அப்படியா? ரொம்ப மகிழ்ச்சி.
சே...! திரும்பவும் குறிதவறி விட்டதே!
அலோ! லூகாவுக்கு தொடர்பு கொடுங்கள்!
சார்! தாராசிம்மாவில் இருந்து அழைப்பு வந்திருக்கிறது.
அப்படியா! கொடு!
அலோ... பெங்காலியா?
மாயாவி கெலிகாப்டரில் இருந்து வயர்லெசில் தொடர்புகொண்டார்.
நான் மார்க்சையும் டக்ளசையும் கைது செய்து கெலிகாப்டரில் வருகிறேன். போர் விமானம் ஒன்று விரட்டுகிறது. அதை முதலில் கவனியுங்கள்!
ஓ.கே. நான் பார்த்துக்கொள்ளுகிறேன்!

Tex Sampath Tirupu

மாயாவி! நீ என்னை அவமானப்படுத்திவிட்டாய்! உன்னை பழிக்குப்பழி வாங்காமல் விடமாட்டேன்!
டக்ளசு! உனக்கு விருந்து காத்திருக்கிறது!
ரொம்ப சந்தோசம்!
மார்க் திடீரென்று தூக்கத்தில் இருந்து விழித்தான். எதிரில் லூகாவை பார்த்து அதிர்ச்சி அடைந்தான்.
லூகா! தாராசிம்மாவில் உனக்கு என்ன வேலை?
முட்டாள்! இது பெங்காலியா! நீ என் காருக்கே வெடிகுண்டு வைக்கிறாயா?
நான் வைக்கவில்லை!
பொய்! எல்லா ஆதாரங்களும் என்னிடம் இருக்கிறது.
உன் சரித்திரமே இப்போது எங்கள் கையில் இருக்கிறது!
ஆ... என்ன சொல்கிறாய்?

மறுநாள் பத்திரிகையில்—
பெங்காலியாவை கைப்பற்ற தீவிரவாதிகளை உருவாக்கியதற்காக டக்ளசு கைது!
என்னை என்ன செய்யப் போகிறாய்?
உன்னை நீதி மன்றத்தில் ஒப்படைத்து விடுகிறேன்! உன் லிஸ்ட்டை அனுப்பி விட்டேன்!
லிஸ்ட்டில் உள்ள முக வரியில் திடீர் சோதனை நடத்தி தீவிரவாதிகளை கைது செய்தனர்.
ஏய்...? முகமூடி! என்றாவது ஒரு நாள் உன்னை ஒரு கை பார்க்கிறேன்!
அப்பவும் நான்தான் வெற்றி பெறப் போகிறேன்!
டார்லிங்! இந்த தீவிரவாதிகளை எப்படி மடக்கிப் பிடித்தீர்கள்?
இது எல்லாம் சர்வசாதாரணம்!
மாயாவி! உன் உதவியை என்றும் மறக்கமாட்டேன்!
டார்லிங்! காட்டுக்குச் செல்வோமா?
கண்டிப்பாக! வரட்டுமா?
முடிந்தது

மிகப்பெரிய மீன் காட்சியகம்!

உலகின் மிகப்பெரிய மீன் காட்சியகம் சீனாவில் கட்டப் பட்டுள்ளது. இது பெய்ஜிங் நகரில் அமையும். 3 ஆண்டில் இந்த மீன் காட்சியகம் கட்டி முடிக்கப்பட்டுவிடும். சங்கு வடி

வில் இந்த மீன் காட்சியகம் அமைக்கப்பட உள்ளது. சுமார் 35 ஆயிரம் சதுர மீட்டர் பரப் பளவு உள்ள இந்த காட்சியகத் தில் மற்ற மிருகங்களும் வைக் கப்படும்.

பெய்ஜிங் நக்ர மிருக காட்சி சாலையும், ஆங்காங் நிறுவனம் ஒன்றும் இணைந்து மீன் காட்சி யகத்தைக் கட்ட உள்ளன.

இதில் கடலில் எப்படி மீன் கள் வாழுமோ அதைப் போன்ற சூழ்நிலை உருவாக்கப் படும்.

பாமாயில் 'மை'!

நம் நாட்டில் பாமாயிலை வடை சுடவும், அப்பளம் பொ ரிக்கவும் பயன்படுத்துகிறோம். இதற்காக ஆயிரக்கணக்கான ரூபாய் செலவில் அது வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. ஆனால் பா மாயில் அதிகம் உற்பத்தி செய் யப்படும் மலேசியாவில் பாமா யிலை 'மை' தயாரிக்க பயன்ப டுத்துகிறார்கள். இதுவரை பெட்ரோலிய பொருட்களில் இருந்துதான் 'மை'கள் தயாரிக் கப்பட்டு வந்தது. ஆனால் பெட்ரோல் வளங்கள் குறைந்து வருவதால் பாமாயில் இருந்து 'மை' தயாரிக்கும்மு றை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதற்கான திட்டம் 3 ஆண்டுக ளுக்குமுன் தீட்டப்பட்டுள்ளது. இப்போது பாமாயில் 'மை' வர்த்தகமுறை தயாரிக்கப்படு கின்றது. பாமாயிலில் இருந்து தயாரிக்கப்படும் வண்ண மைக ளை மலேசியாவில் உள்ள பெ ரிய அச்சகத்தில் பயன்படுத்துகி றார்கள். பெட்ரோலியத்தில் இருந்து தயாரிக்கப்படும் வண்ண 'மை'களை போன்றே இதுவும் இருக்கிறதாம்.

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ் சாலை, சென்னை-600 007. ஆசிரியர்: அ. மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.



மாய வாள்

விண்வெளியில் போட்டா போட்டி!
நாட்டைக் கைப்பற்ற தந்தையை
மகன் கைது செய்கிறான்!!

விறுவிறுப்பான படக்கதை!

படிக்கத் தவறாதீர்கள்!

டிசம்பர் 1-ந் தேதி வெளிவருகிறது.

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.

RANI COMICS
TAMIL FORTNIGHTLY
Regd. No. TN/MS (N)/461
Registered as Newspaper in Sri Lanka

"பளபள நிப்பு தோற்றம் ஜொலிப்பு
கேம்ளினால் என் ஹோம் ஒர்க் விறுவிறுப்பு."

மாயா பாஷாவின் ரகசியம் — கேம்ளின்
ஃபவுண்டன் பேனாக்கள். அதன் உன்னத
நிப்பு மளமளனு விறுவிறுனு எழுதும்.
ஆகவேதான் மாயா பாஷா தன் ஹோம்
ஒர்க்கை ஃபடக்குனு முடிக்கிறான். விளையாட
அதிக நேரம் கிடைக்குது.

camlin
கைகொடுக்கும் கை

Contract.CL.922.93.Tm